DEPOSITION OF WITNESS

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, PANRUTI.

CC.No. 28/2021

Deposition of Witness : LW4/ PW6

| | | | |
|---|---|---|---|
| Name | ராஜேஷ் | Taluk | |
| Father's Name | குப்புசாமி | Village | |
| Age | 34 | Calling | |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of day of **10.11.2025.** | | | |

( Accused present)

சாட்சியை பண்ருட்டி காவல் நிலைய இரண்டாம்நிலை காவலர் திரு.K. பிரசாத் Gr-II 1724 அவர்கள் அடையாளம் காட்டினார்.

**முதல் விசாரணை :**

நான் தற்போது சேமக்கோட்டையில் வசித்து, தற்போது 108 ஆம்புலன்ஸில் Emergency Medical Technician-ஆக வேலை செய்து வருகிறேன். அ.சா-1, அ.சா.4, அ.சா.5 ஆகியோர்களை தெரியும். ஆஜர் எதிரியை தெரியாது. கடந்த 2021ம் வருடம் (தேதி, மாதம் தற்போது ஞாபகமில்லை) ஒருநாள் இரவு சுமார் 01.30 மணியளவில் ஆஜர் எதிரி பாவாடைராயனின்(சாட்சி எதிரியின் பெயரை தாமாக கூறினார்) உறவினர்களான பெண் நபர் ஒருவரும், ஆண் நபர் ஒருவரும் (அவரது விபரங்கள் தற்போது எனக்கு ஞாபகமில்லை) நான் EMT-ஆக பணிபுரிந்து வந்த பண்ருட்டி அரசு மருத்துவமனையில் 108 ஆம்புலன்ஸ் மூலமாக மேற்படி மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு வந்தவர்களை மருத்துவமனைக்குள் விட்டுவிட்டு நான் மருத்துவமனைக்கு வெளியே வந்துவிட்டேன். பின்னிட்டு, சுமார் 1/2 மணி நேரம் கழித்து எனக்கு மருத்துவமனைக்குள் இருந்து சத்தம் கேட்டது. நான் உடனே மருத்துவமனைக்குள் சென்று பார்த்தபோது, ஆஜர் எதிரி அப்போது அங்கு வெளிப்புற காவலராக பணிபுரிந்த அ.சா.1 வெங்கடேசனிடம் சண்டை போட்டதாக கேள்விப்பட்டேன். இதைத்தவிர எனக்கு இந்த வழக்கு சம்மந்தமாக வேறு எந்த விபரமும் தெரியாது. போலிசார் என்னை விசாரித்தார்கள். அவர்களிடம் நான் தற்போது சொன்ன விபரங்களைதான் கூறினேன்.

**அரசு தரப்பில் கேட்டுக்கொண்டதற்கிணங்க சாட்சி பிறழ் சாட்சியாக அறிவிக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி அளிக்கப்படுகிறது**

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை :**

முதல் விசாரணயில், ஆஜர் எதிரியை தெரியாது என்று சொல்லிவிட்டு, பின்னிட்டு

தாமாக முன்வந்து ஆஜர் எதிரி பாவாடைராயனின் உறவினர்களைதான் மேற்சொன்ன 108 ஆம்புலன்ஸ் மூலமாக பண்ருட்டி அரசு மருத்துவமனைக்கு வந்தவர்களை மருத்துவமனைக்குள் விட்டேன் என்று சொல்லியுள்ள நிலையில், ஆஜர் எதிரியை பற்றிய விபரங்களும், அவர் சிறப்பு உதவி ஆய்வாளர் வெங்கடேசன் என்பவரை தாக்கியதையும் நேரடியாக பார்த்தேன் என்றால் நான் ஆஜர் எதிரி பாவாடைராயன், அ.சா.1 வெங்கடேசனை தாக்கியதை நேரடியாக பார்க்கவில்லை. மேற்படி எதிரியின் விபரம் மேற்படி சம்பவத்தை கேள்விப்படும்போது தெரியும். சம்பவத்தை நான் கேள்விப்படும்போது பாவாடைராயன் மேற்படி மருத்துவமனையில் இருந்தபோது நான் அவரை பார்த்தேன். தற்போது எனது முதல் விசாரணையில் ஆஜர் எதிரியை பார்த்தபோது சட்டென்று அவர் என் ஞாபகத்திற்கு வராததால் முதலில் தெரியாது என்று சொல்லிவிட்டேன். பின்னர் அவர் பற்றிய விபரமும், அவரது முகமும் எனக்கு ஞாபகம் வந்ததால் பாவாடைராயனின் உறவினர்கள் என்று அவரது பெயரை குறிப்பிட்டு சொன்னேன். மேற்படி வழக்கு சம்பவத்தை நான் நேரடியாக பார்த்தேன் என்றாலும், தற்போது எனக்கு மட்டும் தெரிந்த ஏதோ ஒரு காரணத்திற்காக வழக்கு சம்பவத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை என்றும், கேள்விதான்பட்டேன் என்று பொய்யாக சொல்கிறேன்என்றாலும் சரியல்ல. வழக்கு சம்பவத்தை நான் நேரடியாக பார்த்ததால்தான் ஆஜர் எதிரி பாவாடைராயன் பற்றிய விபரமும், அவரது முகமும் தெரியும் என்று சொன்னால் சரியல்ல.

2. போலிசார் விசாரணையில், கடந்த 08.02.2021 அன்று இரவு நான் TN-20-G-2237 என்ற 108 ஆம்புலன்ஸில் பண்ருட்டி அரசு மருத்துவமனை பகுதியில் பணியிலிருந்தபோது, மணலூர் கிராமத்திலிருந்து அழைக்கப்பட்ட அவரச அழைப்பின் காரணமாக எமது அலுவலக உத்தரவின் பேரில் நான் திருநாவலூர் காவல் நிலைய சரகம் உளுந்தூர்பேட்டை தாலுக்க, மணலூர் கிராமத்திற்கு சென்று எங்களது ஆம்புலன்ஸில் அங்கு காயமுற்றிருந்த ராமச்சந்திரன் மனைவி உண்ணாமலை மற்றும் அவரது மகன் வெங்கடேசன் ஆகியோர்களை அழைத்துக்கொண்டு பண்ருட்டி அரசு மருத்துவமனைக்கு அதிகாலை 02.30 மணியளவில் அழைத்து வந்து சிகிச்சையில் சேர்த்தேன் என்றும், மேற்படி காயமுற்ற நபர்கள் சிசிக்சையில் இருந்தபோது, அதிகாலை 2.35 மணியளவில் அவர்களுக்கு ஆதரவாக பின்னர் பெயர், விலாசம் கேட்டு தெரிந்த ஆஜர் எதிரியான பாவாடைராயன் என்பவர் பண்ருட்டி அரசு மருத்துவமனைக்கு வந்து காயமுற்றிருந்த நபர்களை பார்த்துவிட்டு புறக்காவல் நிலையத்தில் இருந்த சிறப்பு உதவி ஆய்வாளர் வெங்கடேசனிடம் சென்று, மேற்சொன்ன இரண்டு நபர்களுக்கும் A.R. பதிவு செய்யுங்கள் என்று கூறியதற்கு சிறப்பு உதவி ஆய்வாளர் அவரிடம் மருத்துவரிடம் சொல்லுங்கள், அவர் எழுதுவார் என்று சொன்னதற்கு, சிறப்பு உதவி ஆய்வாளரை பார்த்து அவரிடம், பணம் எவ்வளவு

வேண்டுமானாலும் வாங்கிட்டு கேஸ் எழுதுடா என்றும், அசிங்கமான வார்த்தையை சொல்லி அசிங்கமாக திட்டினார் என்றும், அதற்கு சிறப்பு உதவி ஆய்வாளர் அந்த நபரிடம் மரியாதையாக பேசுங்கள், எதுவாக இருந்தாலும் பேசுங்கள், எதுவாக இருந்தாலும் மருத்துவரை போய் பாருங்கள் என்று சொன்னதற்கு அவர், சிறப்பு உதவி ஆய்வாளரை பார்த்து, நான் யார் தெரியுமா, நீ என்ன பெரிய அசிங்கமான வார்த்தையை சொல்லி கேஸ் எழுதுடானு சொன்னா, நீ எழுத மாட்டிங்குற என்று சொல்லி தன் கையால் சிறப்பு உதவி ஆய்வாளரின் இடதுபக்க தாடையின் ஓங்கி குத்தினார் என்றும், அதில் அவருக்கு இடது பக்க கீழ் உதட்டில் இரத்தக்காயம் ஏற்பட்டது என்றும், உடனே சம்பவத்தை பார்த்த நானும், மருத்துவமனையில் இருந்த செவிலியர்கள் சிவபிரியா மற்றும் அன்னபூரணியும் பாவாடைராயனை சத்தம் போட்டு, விலகி போக சொன்னோம் என்றும், அதற்கு அவர் அங்கு நோயாளிகளுக்கு குளுக்கோஸ் போடும் இரும்பு ஸ்டான்டை தூக்கி காட்டி சிறப்பு உதவி ஆய்வாளரை பார்த்து, மரியாதையா கேஸ் எழுதளான உன்ன இதாலே அடிச்சி கொன்னுடுவேன் என்று மிரட்டினார் என்றும், உடனே மருத்துவமனையில் இருந்தவர்களும், நாங்களும் அவரை அங்கிருந்து வெளியே அனுப்பி வைத்தோம் என்றும், பிறகு சிறப்பு உதவி ஆய்வாளர் தனக்கு ஏற்பட்ட காயத்திற்கு, மேற்படி மருத்துவமனையிலேயே மருத்துவரிடம் காண்பித்து சிகிச்சை பெற்றுக்கொண்டார் என்றும் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. அவ்வாறு போலிசாரிடம் சொல்லிவிட்டு, தற்போது எனக்கு மட்டும் தெரிந்த ஏதோ ஒரு காரணத்திற்காக அரசு தரப்பிலிருந்து விலகி ஆஜர் எதிரிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை-**

சம்பவம் நடந்த அன்று நான் பணியில் இருந்தேன் என்பதற்கான ஆவணம் ஏதேனும் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் இல்லை.

DEPOSITION OF WITNESS

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, PANRUTI.

CC.No.28/2021

Deposition of Witness : LW8/ PW7

| Name | செல்வகணபதி,<br>சிறப்பு உதவி ஆய்வாளர் | Taluk | |
|---|---|---|---|
| Father's Name | கலியமூர்த்தி | Village | |
| Age | 58 | Calling | |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of day of **10.11.2025.** | | | |

( Accused present)

**முதல் விசாரணை** :

1. நான் தற்போது கடலூர் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். நான் பண்ருட்டி காவல் நிலையத்தில் கடந்த 09.02.2021 அன்று காலை 06.00 மணியளவில் நிலைய ஆஜரில் இருந்தபோது நடுவீரப்பட்டு காவல் நிலைய சிறப்பு உதவி ஆய்வாளர் வெங்கடேசன் பண்ருட்டி அரசு மருத்துவமனை வெளிப்புற காவல் நிலையத்தில் அயல்பணியில் இருந்தவர் பண்ருட்டி காவல் நிலையம் ஆஜராகி எழுத்து மூலமாக கொடுத்த புகார் மனுவைபெற்று அதன் அம்சங்களின் அடிப்படையில் நிலைய குற்ற எண்.102/2021, இதச பிரிவுகள் 294(b), 332, 506(ii)-ன் கீழ் முதல் தகவல்அறிக்கை பதிவு செய்து முதல் தகவல்அறிக்கையுடன் அசல் புகார் மனுவையும் சமூகம் நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்து புலன் விசாரணைக்காக வழக்கு கோப்பினை காவல் உதவி ஆய்வாளர் திரு.ஜவ்வாது உசேன் அவர்களின் பார்வைக்கு வைத்தேன். (**மேற்படி முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3/அ.சா.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). காவல் உதவி ஆய்வாளர் 11.02.2021 அன்று என்னை விசாரணை செய்து, வாக்குமூலம் பதிவு செய்தார்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**:

சம்பவம் நடந்ததாக சொல்லப்படும பண்ருட்டி அரசு மருத்துவமனைக்கும், காவல் நியைத்திற்கும் இடையேயான தூரம் சுமார் 2 1/2 கி.மீ. இருக்கும். மேற்படி தூரத்தினை இருசக்கர வாகனத்தில் 10 நிமிடங்கள் கடந்து வந்துவிடலாம் என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கையில் 3 வது காலத்தில் C பிரிவில் 09.02.2021 அன்று காலை 06.00 மணிக்கு தான் தகவல் கிடைத்ததாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். ஆனால் சம்பவம் நடந்த உடனேயே எனது கைபேசி மூலம் காவல் நிலையத்திற்கு தகவல் தெரிவித்துவிட்டதாக

அ.சா.1 அவரது குறுக்கு விசாரணையில் கூறியுள்ளார் என்றால் சரிதான். மேற்படி எதிரி, மேற்படி புகார்தாரரால் தாக்கப்பட்டு அரசு பொது மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக்கொண்டார், அதன் அடிப்படையில் மேற்படி புகார்தாரர் மீது நடவடிக்கை ஏதேனும் எடுத்தேனா என்றால் எடுக்கவில்லை. இந்த வழக்கு சம்பந்தமாக எனது மேல் அதிகாரி 11.02.2021 அன்று என்னை விசாரணை செய்தார். இவ்வழக்கின் புகார்தாரர் என்னுடன் பணிபுரியும் சக ஊழியர் என்பதனால் அவர் கொடுத்த பொய்யான புகாரைப் பெற்று எதிரி மீது தவறாக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளேன் என்றால் சரியல்ல. மேற்படி எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

**அரசு தரப்பில் மறு விசாரணை:**

எதிரி தரப்பு குறுக்கு விசாரணையின்போது மேற்படி எதிரி, மேற்படி புகார்தாரரால் தாக்கப்பட்டு அரசு பொது மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக்கொண்டார், அதன் அடிப்படையில் மேற்படி புகார்தாரர் மீது நடவடிக்கை ஏதேனும் எடுத்தேனா என்றால் எடுக்கவில்லை என்று சொல்லியுள்ள நிலையில் ஏன் நான் நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் மேற்படி இவ்வழக்கின் புகார்தாரரான சிறப்பு உதவி ஆய்வாளர் வெங்கடேசன் இவ்வழக்கின் எதிரியான பாவாடைராயனை தாக்கியது சம்பந்தமாக எந்த தகவலும் மருத்துவமனையிலிருந்து காவல் நிலையத்திற்கு பெறப்படவில்லை. மேலும் இவ்வழக்கின் எதிரி பாவாடைராயன் மேற்படி சிறப்பு உதவி ஆய்வாளர் மீது எந்த புகாரும் எவ்வகையிலும் அளிக்கவில்லை.

**எதிர தரப்பில் மறு குறுக்கு விசாரணை:**

மேற்படி எதிரியை அன்றே கைது செய்ததனால் அவருக்கு இவ்வழக்கின் புகார்தாரர் மீது புகார் கொடுப்பதற்கு போதிய கால அவகாசம் கிடைக்கவில்லை என்றால் சரியல்ல. ஆஜர் எதிரி மேற்படி புகார்தாரரால் தாக்கப்பட்ட தகவலினை அயல்பணியில் இருக்கக்கூடிய அதிகாரிதான் எனக்கு தெரிவிக்கவேண்டும் என்றால் மேற்படி சிறப்பு உதவி ஆய்வாளர் வெங்கடேசன் அடிப்பட்டு இருந்ததனால் அன்று O.P.லிருந்த வேறு யார் வேண்டுமானாலும் தகவல் தெரிவிக்கலாம். ஆனால் அன்று O.P -யில் மேற்படி சிறப்பு உதவி ஆய்வாளர் வெங்கடேசனை தவிர வேறு யார் இருந்தனர் என்று எனக்கு தற்போது ஞாபகமில்லை. அரசு பொது மருத்துவமனைகளில் அயல்பணிக்காக ஒவ்வொரு காவல் நிலையத்திற்கும் ஒருவர் இருப்பார்களா என்றால் அவ்வாறு கிடையாது, பண்ருட்டி உட்கோட்டத்திற்கு மொத்தமாக சேர்த்து இரண்டு அயல்பணியர் இருப்பர்.